செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

உ
சிவமயம்

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம் : விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். பிரதி விலை: சதம் 15 தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரணஞு மார்கழி மீ க0 உ வெள்ளிக்கிழமை (25-12-1970) [இலக்-ந அ

12/1/2/25

# ஈழவள நாட்டின் காவற் கடவுள்

## முருகக்கடவுள் வழிபாடு

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர், பருத்தித்துறை.

முன்வளர்ச்சி – 3.

முதலாம் நூற்ருண்டிலே சூத்திரக அரசனல் செய்யப்பட்ட மிருகச் சகடி என்னும் சம்ஸ்கிருத நாடகத்தில் (an interesting Sanskrit drama of the 1st century attributed to King Shudraka) ஒரு பார்ப்பன கன்னக்காரன், முருகக் கடவுளை தன் குலத்தவரின் பரிபாலனக் கடவுளாக வேண்டிக்கொள்ளுகிருன்; ஏனெனில் அவர் போர்க் கடவுளாதலின், அவனும் அவனுடைய கூட்டத்தாரும் போரில் சுரங்கமறுத்தல் போல ஜன சங்கத்திற்கு விரோதிகளாய் போர்செய்து தங்கள் சீவியத்தை நடத்துந் தன்மையுடையவர்களாதலினுல்.

இக்காலத்தில், வங்காளத்தில் (Bengal) வருடத்தில் துர்க்காதேவி பூசைத் திருவிழா நாட்களில் - ஒரு நாளில் மாத்திரம் - புத்திர சந்தானம் விரும்புகிறவர்கள் முருகப் பெருமானை வணங்கி வருகிருர்கள். ஆயின், தமிழ் ஆதிக்கம் எங்கெங்கு பரம்பியிருக்கிறதோ அங்கங்கெல்லாம் முருகப்பெருமாஞர்க்குச் சிரேஷ்டமான வணக்கமும் மகிமையும் அளிக்கப்படுகின்றது. தமிழர்கள் அவரைத் தங்கள் இனத்தையும், பாஷையையும் இலக்கியத்தையும் பாது காவல் செய்யும் கடவுளாகக் கருதி அவரில் விசேஷ பற்றுடையவர்களாயிருக்கிருர்கள்.

ஆதிகாலத்தில் இலங்கை விலங்கியல் நூல்வல்லோர் (Zoologists) கூறுகிறபடி, ஆபிரிக்காவுக்குச் சமீபத்திலுள்ள மடகாஸ்கார் (Madagascar) தீவிலிருந்து அவுஸ்திரேலியா வரைக்கும் நீண்டிருந்த லெமூரியாக் கண்டமாயிருந்த காலத்திற்ருன் முருகப்பெருமான் இலங்கைக்குவந்தருளினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அக் காலத்தில் இக்கண்டம் தேவர்களுக்குப் பல இடர்கள் விளைத்த சூரபன்மன் ஆளுகையிலிருந்திருக்கின்றது. வெந்தகுவர்க்காற்ருத விண்ணேர்முறைக் கிரங்கி பரசிவனுரின் ஆறு திருமுகங்களுங்கொண்ட செந்தழற்கண்களிலிருந்து தோற்றிய எம்பெருமான் தனது சேனைகளுடன் வந்து - சூரபன்மன் முதலியோருடன் போர்புரிந்து - அவனை வேலாற் பிளக்க, அவன் மயிலும் சேவலுமாய் முறையே வாகனமும் கொடியுமாய் அமைந்தான், அந்த வேல் ஞான சத்தியாகும்.

அந்தமில் ஒளியின்சீரால், அறுமுகம் படைத்த பண்பால்,
எந்தை கணின்றும் வந்த வியற்கையாற், சத்தியாம்பேர்

( வளர்ச்சி 2-ஆம் பக்கம் )

## மக்கட்பிறப்பின் மாண்பு

( திரு. செ. வைத்தியலிங்கம், எம். ஏ., எம். லிட் ,)

முன் வளர்ச்சி —5

'எனக்கு மூனக்கும் இசைந்த
பொருத்தம் என்ன பொருத்த
இந்தபபொருத்தம் உலகில்[மோ
பிறருக்கெய்தும் பொருத்தமோ
என்றும்,

'நீதி நடஞ்செய் பேரின்ப நிதி
நான் பெற்ற நெடும் பேறனை
ஓதி முடியா தேன்போல் இவ்
வுலகம் பெறுதல் வேண்டுவே
[னே

என்றும் இறைவனேடு மன்ருடுதலைக் காணலாம்.

பிறருக்கு உதவி புரிவதால் உதவி பெற்ருேரின் அக மூக மலர்ச்சியைக் கண்டநுபவிக்கும் இன்பம் - ஈந்துவக்கும் இன்பம் மக்கட்பிறவியிற்ருன் சாத்தியமாகிறது. இவ்வின்பம் தேவர்களுக்கும் கிட்டாத பேரின்பம். இவ்வின்பத்தை இல்லறத்தாரும் துறவறத்தாரும் தத்தம் வாய்ப்பிற்கேற்ப ஆற்றி மகிழலாம்; ஈடேறலாம்; ஈடேற்றலாம்.

மக்கட்குச் செய்கின்ற தொண்டை மகேஸ்வரனுக்குப் புரியும் தொண்டாகக் கருதியதனுல் தானே என்னவோ, மனிதன் தான் வணங்கும் இறைவனையும் பெரும்

வளர்ச்சி 3-ம் பக்கம்

உ
சிவமயம்

## உன் அடைக்கலமே

திருச்சிற்றம்பலம்

பிறிவறியாவன்பர் சின்னருட்
பெய்கழற் ருழிணைக்கீழ்
மறிவறியாச்செல்வம் வந்துபெற்
ருநன்னை வந்திப்பதோர்
நெறியறியே னின்னை யேயறி
யேனின்னை யேயறியும்
அறிவறியேனுடை யாயடி
யேனுன் அடைக்கலமே

திருச்சிற்றம்பலம்

— மாணிக்கவாசகசுவாமிகள்

## மக்களின் வினையும் கடமையும்

புலவர்சிகாமணி, பண்டிதர் பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர்

இவ்வுலகம் நிற்பனவும் நடப்பனவும் உள்ள விசித்திரமானது. மக்கள் மேலான அறிவும், செயலும் உள்ளவர்கள். மனிதர் வாழும் பல கண்டங்கள் இருக்கின்றன பரத கண்டம் மிக மேலான அரிய காட்சியளிப்பது ஈழ மண்டலமும் மண் தோன்றி கல்தோன்ருக் காலம் முதல் மூர்த்தி தீர்த்தங்களையுடையது. நகுல முனி தவஞ்செய்த கிரிமலை புண்ணிய தலம். தீர்த்தமுடையது, நகுலேஸ்வரர் அருள் பொழியும் பண்பு கூறவும்படுமா? மனிதர்களின் வினையை (கர்மாவை) தேயச்செய்து வீடுபேருகிய இன்பம்நல்க பரமசிவபெருமான் பக்கு

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனத்தால் கௌரவிக்கப்பெற்ற

## ஈழத்து அறிஞர்கள்

பண்டிதமணி அவர்களுக்கு

## "மகாவித்துவான்" எனும் பட்டமளிப்பு

காஞ்சி ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அணிமையில் ஆங்கு நிகழ்ந்த குருபூசை விழாவில் ஈழத்தைச் சேர்ந்த 14பேர்களுக்குச் சிறப்புப் பட்டங்கள் அளித்துள்ளார்கள்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு 'மகா வித்துவான்' என்னும் கௌரவப் பட்டம் வழங்கப்பெற்றுள்ளது. நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்கு 'சிவ ஞான பாஸ்கரர்' எனும் பட்டமும், கொக்குவில் புலவர்மணி திரு. த. குமாரசாமிப்பிள்ளை அவர்களுக்குப் 'பெருஞ்சொல் விளக்கனர்' எனும் பட்டமும் வழங்கப் பெற்றுள்ளது.



பண்டிதமணி, மகாவித்துவான்
சி. கணபதிப்பிள்ளையவர்கள்

மேலும் பட்டங்கள் பெறுவோர் விபரம் வருமாறு:-

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி வே. க. கந்தசாமி —சிவநெறிப் புரவலர்.

மில்க்வைற்சோப் அதிபர் திரு க. கனகராசா—சிவதர்ம வள்ளல்.

கோப்பாய் சோ. சுப்பிரமணியக் குருக்கள்— 'சித்தாந்த பானு'

கொழும்பு விவேகானந்த சபை காரியதரிசி மூ. சிவராசா— 'சித்தாந்த சிரோமணி'

மட்டக்களப்பு இ குழந்தைவேலு —'பண்ணிசை வேந்தர்'

கொழும்பு, ஆர். மூத்துச்சாமி ரெட்டியார் — சன்மார்க்க சாது

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி — சித்தாந்த ஞானகரம்

புங்குடுதீவு வித்வான் பொன். கன. ராசா — சித்தாந்த சிகாமணி

வைத்தியர் சி. கணபதிப்பிள்ளை (புங்குடுதீவு) — சித்தாந்த ரத்னகரம்'.

யாழ்ப்பாணம் செல்வி சரோசனி தனபாலசிங்கம் 'பண்ணிசை அரசி'

புங்குடுதீவு சரவணமுத்து சுவாமி—'சிவனடித் தொண்டர்'

சில ஆண்டுகளுக்கு முன் மெய்கண்டார் ஆதீன குருமகாசந்நிதானம் ஈழம் வந்து பல இடங்களுக்கும் சென்று அருளுரைகள் வழங்கிச் சென்றது எல்லோருக்கும் நினைவிருக்கலாம். இம்முறை திருக்கேதீச்சரத்தில் நிகழவிருக்கும் திருவாசக விழாவில் இப்பெரியார்களுக்குப் பட்டமளிப்பு வைபவம் நிகழும். இம்மாநாட்டைச் சிறப்பாக நடாத்த ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் ஒழுங்குகளைக் கவனிக்கின்றது.

(நமது நிருபர்)

தமிழிசை விழாவில்

## தம்பிரான் சுவாமிகள்

சென்னை தமிழிசைப்பெருவிழாவில் 29-12-70 இரவு 9 மணி தொடம் 10-30 வரை நல்லை ஞான சம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் "இசையும் இறைவனும்" எனும் பொருள்பற்றிய இன்னிசைச் சொற்பொழிவு நடாத்த ஏற்பாடாகியுள்ளது

30 ஆந் தேதி தம்பிரான் சுவாமிகள் ஈழம் வருவார்கள் ந. சி,

சென்னை இசைவிழாவில்

## ஈழத்துச் செல்வி

சென்னை மியூசிக் அக்கடமியின் ஆதரவில் நடைபெற்று வரும் இசைவிழாவில் ஈழத்தின் இளம் பாடகி, செல்வி பிரேமளாவின் இன்னிசை 26-12-70 இல் நிகழவிருக்கிறது. இசைவாணி டாக்டர். எம். எஸ். சுப்புலட்சுமி இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்கிருர்.

தமிழகத்தில் நிகழும் இசைவிழாவில் முதன் முதலாகப்பங்கு கொள்ளும் இளம் பாடகி என்ற சிறப்பை இவர் பெறுகிருர். ஈழத்தில் ஸ்ரீ. பி. எஸ். மணிஐயங்காரிடமும தமிழகத்தில் ஸ்ரீ வி. கே. கோவிந்தராசாவிடமும் இவர் இசைபயின்றவராவர்.

### விஞ்ஞானி கலந்துகொள்வார்

மீசாலை விஞ்ஞானக் கழகத்தின் 3ஆவது ஆண்டுவிழா ஜனவரி 2-ஆம் திகதி நிகழவிருக்கிறது. இவ்விழாவில் இலங்கையின் பிரபல விஞ்ஞானி திரு. பொன்னம்பெருமா அவர்கள் கலந்துகொள்வார்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சாதாரண ஞு மார்கழி மீ ௧௦-௨ வெள்ளிக்கிழமை [1970]

## கல்வியின் பயன் அடக்கம்

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

அடக்கமாவது மெய், மொழி, மனம் ஆகிய வற்றைத் தீநெறிக் கண் செல்லாது நிறுத்துதலே யாம். ஒருவனை அடக்கமாகிய அறம் தேவலோகத்தில் சேர்க்கும். அடங்காமையாகிய பாவம் அவனைக் கொடிய நரகத்திற் சேர்த்து விடும். இளமையிலேயே சிறுவர்கள் இவ்வரிய அறத்தைப் பின்பற்றக் கூடிய முறையில் கல்வியூட்டப்படுதல் வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தேக வலிமையுடையவர்களாயும், நற்சிந்தனையுடையவர்களாயும், பிறருக்கு நன்மை புரிபவர்களாயும் திகழ்வார்கள். வெறும் புத்தகப் படிப்பினால் ஒருபயனுமில்லை. முற்காலத்தில் ஒருவனுடைய வாழ்வை நான்கு ஆச்சிரமங்களாக வகுத்ததும் இவ்வடக்கத்தை இளமையிலேயே சிறுவர்களிடத்தில் உற்பத்தி செய்தற் பொருட்டேயாம், அந்நான்கு ஆச்சிரமங்களாவன; பிரமச்சரியம், கிருகத்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன.

பிரமச்சரியம் அனுட்டிக்கின்றவன் நற்குண நற்செய்கைகள் உடையவனாய் ஒரு ஆசாரியனை அடைந்து கல்வி கற்பவனாவான். இவ்விரதத்தையனுட்டிக்கின்றவன் மன மொழி மெய்களினால் ஒருவருக்குந் தீமை செய்யாமலிருந்து கொலை, களவு, கள், காமம், குரு நிந்தை முதலிய பஞ்ச மாபாதகங்களை நீக்கிக் கொள்ளுதல் வேண்டும். இங்கு காட்டிய பிரமச்சரியவொழுக்கத்தை மாணவர்கள் பின்பற்றுதல் வேண் [illegible] அவர்கள் கல்வியினால் யாதாயினும் நற்பயன் உண்டாகும். இக்கால மாணவர்களுடைய மனக்கலக்கத்துக்கும் விரக்திக்கும் காரணம் அடக்கத்தை அனுட்டிக்காமையேயாகும்.

சுவாமி விவேகானந்தர் ஒரு பட்டதாரி பெரிய கல்விமான், அற்புதமான பேச்சாளன். அத்தகைய ஒருவர் ஒரு பள்ளிக்கூடத்திலே கல்வி பயிலாத ஒருவரிடம் ஞானோபதேசம் பெறலானர். காரணம் என்ன? அவருடைய குரு பகவான் இராமகிருஷ்ணர் அடக்கத்தின் சிகரமாகத் திகழ்ந்தார். அடக்கமுடையவனிடத்தில் கற்பதெல்லாம் அமையும்.

சுவாமி விவேகானந்தர் தமது குருவைப்பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டதை இவ்விடத்தில் குறிப்பிடுவோம்.

"குரு தேவருக்குக் கல்வியென்ற நாமமேயில்லை. பிறருடைய கருத்துக்களைத் தேடி அவர் அலையவில்லை அவற்றினாலே தன்மனத்தையவர் மாசுபடுத்தவுமில்லை. உள்ளத்தை அடக்கமாக வைத்து—ஆரோக்கியமாக வாழ்ந்தார். அவருடைய உள்ளம் புனிதம் அடைந்தது. அவருடைய உள்ளத்தில் ஞானம் குடி கொண்டுவிட்டது. அவருக்கு ஒரு சர்வகலாசாலையில் சேரவேண்டிய அவசியமில்லை. இக்காலத்தில் ஒருவன் தனது சீவிய காலத்தில் அரைப்பங்கைப் பிறருடைய கருத்துக்களினால் உள்ளததை நிரப்பக் கழிக்கின்றான். குருதேவருடைய பூரண நிலைமையை நன்குணர்ந்த பேராசிரியர் மாக்ஸ்மூலர் இக்காரணத்தினால் அவரை ஒரு 'உண்மையான மகாத்மா' எனக்கூறினார்." பெரியோர்கள் அடக்கம் என்னும் அறம் மூலமே கல்வி கற்றார்கள், உலகுக்கு நன்மை புரிந்தார்கள்.

எங்கள் நாட்டிலுள்ள அனைவரும் இவ்வடக்கத்தின் பெருமையை உணர்ந்து அவ்வறத்தைப் பின்பற்றுவார்களாக.

௨

## திருவெம்பாவை பூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் மார்கழி மீ ௧௭-ம் ௨ (1-1-71) வெள்ளிக்கிழமை தொடக்கம் மார்கழி மீ உ௬-ம் ௨ (10-1-71) ஞாயிறுக்கிழமை வரை சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 8 மணிக்குத் திருவெம்பாவை பூசையும், இரவு 7 மணிக்கு திருவாதவூரடிகள் புராணபடனமும் நடைபெறும்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

ஆ. தனபாலசிங்கம்
காரியதரிசி.

மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர்

சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம், 23-12-70

## முருகக் கடவுள் வழிபாடு

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

தந்திடும் பனுவல்பெற்ற தன்மையாற், றனிவேற்பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக்கண்டு எக்கவலைநீத்தேம்.

கந்தபுராணம்

சில கோயில்களில் வேலை அப்பெருமானாக வணக்கஞ் செய்யப்படுகின்றது இன்னும் சில கோயில்களில் ஆறுமுகங் கொண்ட வடிவமாய் இருபக்கத்தும் வள்ளி தெய்வயானையாகிய இரு அம்மைமாருடன் வணங்கப்படுகிறார். அவ்விரு சத்திகளும் முறையே இச்சாசத்தியும் கிரியா சத்தியுமாகும்.

வேத சாஸ்திரிகளின்படி சுப்பிரமணியப் பெருமான் இவ்விருவரையும் மணஞ்செய்தல் உலகத்தாருக்கு விவாக வாழ்க்கையை எவ்வாறு நடத்தவேண்டுமென்று ஓர்மாதிரியைக் காண்பித்து, அவ்வாறு ஒழுகி அவ்வில்லறத்திற்குரிய கடமைகளை செய்யின் துறவற வாழ்வைப் போல் வீடுபயக்கும் தன்மையுடையதென்பதைக் காட்டுவதற்கேயாம்.

கோடிவர் நெடுவரைக் குறவர் மாதுநீ
யாடிய சுனையதாய் அணியுஞ் சாந்தமாய்
சூடிய மலர்களாய் தோயப்பெற்றிலேன்
வாடினன் இனிச்செயும் வண்ணம் யாவதே.

(கந்தபுராணம் – வள்ளியம்மை திருமணப்படலம் 87)

எம்பெருமானின் பிறப்பைப் பற்றிய சில சரித்திரங்கள் (மேலைத் தேசத்தில் சென்று) பிரதானமாய் - பழைய கிரேக்கதேசத்திற் சென்று அக் கிரேக்கர்களின் சமயத்திலும் இலக்கியங்களிலும் அடிச்சுவடுகளை விட்டிருக்கின்றன.

"யாழ்ப்பாண வைபவமாலை"யின்படி, சுப்பிரமணியப் பெருமானின் திருவுருவம் 9-ம் நூற்றுண்டில் காங்கேசன் துறைமுகத்தில் இறக்கப்பட்டது. தமிழ்ப் பிங்கலந்தை நிகண்டின்படி, அவருடைய திருநாமங்கள் 57 ஆகும். அவற்றிற் சில வருமாறு —

| | | |
|---|---|---|
| 1. | அக்கினி பூ | — நெருப்பிலுதித்தவர். |
| 2. | காங்கேசன் | — கங்கையிற் சேர்ந்தமையால் |
| 3. | சரவணபவ | — சரவணவாவியிலுதித்தமையால் |
| 4. | சரவணமுத்து | — ,, ,, |
| 5. | ஸ்கந்தர் | — ஒன்றாகச் சேர்க்கப்பட்டமையால் |
| 6. | கார்த்திகேயர் | — கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்தமையால், |
| 7. | சண்முக | — ஆறுமுகங்கொண்டமையால். |
| 8. | கந்தபதி | — ஒரு பற்றுக்கோடின்றி, அருவாகித் தானேநிற்குந் தத்துவங் கடந்த பொருள். -(நச்சினார்க்கினியர்) |

24 நூற்றுண்டுகளுக்கு முன்னரே புத்தசமயம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் முருகக் கடவுள் வணக்கம் அதனால் குன்றவேயில்லை. ஒவ்வொரு புத்தர் வணக்க கோவிலிலும்கதிர்காமக்கடவுளுக்கும் "கதிரகா தெய்யோ" ஒரு ஆலயம் இருந்துவருகின்றது. பௌத்தர்கள் செய்யும் சடங்குகளிலும் விழாக்களிலும் முருகப்பெருமானுக்கே முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

கண்டி நகரத்தில் ஒவ்வொரு வருடமும் வருகின்ற புத்த விழாவில் (Perahera) முருகப்பெருமானுக்கே முதன்மை கொடுபட்டு வந்தது. 18 ம் நூற்றுண்டின் நடுப்பகுதி வரைக்கும் புத்த தந்த விழா கொண்டாடப்பட்டு வந்ததேயில்லை. அவ்வாண்டின் நடுப் பகுதியிற்றொடங்கித் தான் கீர்த்தி ஸ்ரீ ராசசிங்கன் (கண்டியரசன்) சீயம் (Siam) தேசத்திலிருந்து கொண்டு வந்த பௌத்த குருமார்களைப் பிரியப்படுத்தும பொருட்டே புத்த தந்தம முதன் முதல் பெறகிற (Perahera) விழாவில் கொண்டாடப்பட்டு, இன்றும் நடத்தப்பட்டு வருகின்றது.

காலுகங்கை நதியின் தென்கரையிலுள்ள கழுத்துறை (Kalutara) என்ற பட்டினம் முருகப்பெருமானது பெயரோடு சம்பந்தப்பட்டு, இன்றும் "வேல் புரம" (City of the Lance) என்னும் நாமத்தையுடையதாயிருக்கின்றது பட்டினத்தின் எதிர்க்கரை தேவசத்துரு (Devasetra Kalutara -e emies of the Gods) என்று அழைக்கப்படுகின்றது.

இப்பெயர்களிலிருந்து முருகப்பெருமானது அதிகாரஞ் செல்லுமிடம் (His jurisdiction) இலங்கையின்தென்பாகத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட வேண்டுமென்றவர்களின் இயக்கம் சித்தியடைந்திலது என்பதையும் அவர்கள் எம்பெருமானுடைய பக்தர்களால் பிசாசுகளாக மதிக்கப்பட்டார்களென்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம.

கி. மு. முதலாம் நூற்றுண்டில் துட்டகெமுனு என்னும் அரசன் கதிர்காம சுவாமி கோயிலைத் திருத்திக் கட்டுவித்து சர்வமானியஞ் செய்தானென்றும், அவ்வாறு செய்தற்குக் காரணம் அவன் தன் முன்னோர்களின் இராசதானியாகிய அநுராதபுரத்தைத் தமிழரசன் எல்லாளனிடமிருந்து கைப்பற்ற வேண்டுமென்று எண்ணி, கதிர்காம சுவாமியிடப் வரம் பெற்று அதனால் எல்லாளனுடன் போர் செய்து அவனைக்கொன்று வெற்றியடைந்தான்; அதனால் அப்பெருமானுக்கு நன்றி செலுத்துங் காரணமாக மேற் சொல்லிய சிறந்த கைங்கரியத்தைச் செய்தான், என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தச் சம்பவங்கள்-"கந்த உபதை"- என்று கூறப்படும் சிங்களக் கவிதை(பாட்டுக்கள் 41-46) யால் உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றது. (வளரும்)

வட்டுக்கிழக்கு- த்தன்கேணி

## திருமுறைக்கழகம்

—0—

எதிர் வரும் திருவெம்பாவை நாளில் நடைபெறவிருக்கும் மணிவாசகர்விழாவில் தமது திருமுறை விழாவைக் கொண்டாட இக் கழகத்தினர் முன்வந்துள்ளனர். அதனை யொட்டி இக் கழகத்தினரால் திருமுறைப் பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி என்பன அணிமையில் நடத்தப்பெற்றன, இப் போட்டிகளின் இறுதிமுடிவுகள் கழகத்தினரால் வெளியிடப்பெற்றுள்ளது இரு போட்டிகளிலும் மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப் பிரிவு ஆகியவற்றில் பல மாணவ மாணவியர் பங்குபற்றித் தம் திறமையைக் காண்பித்தனர்.

## மக்களின் வினையும்...

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

வம்நோக்கியிருந்தருளுகின்றார். அப்பரமசிவனை சனகர், சந்தனர், சனதைனர், சனற்குமாரர் நீங்காதிருந்து மெய்ஞ்ஞானமடைந்தனர் மனிதனாகிய இப் பிறவிஉயர்வானது என்று உணர்வதே வினையின் நீங்கி வீடுபேறு அடைய வழியாம். தீவினை கெட சிவத்தியானமே சிறந்த வழியாகும். இதனை மனிதன் நினைக்கிறார்களா? ஒரு முருகன் நல்லூரில் காட்சிக்கு எளியனாய், அருளுக்கு இன்ப சாகரனாய் விளங்குகின்றார். "வினையின் வந்தது வினைக்கு விளைவானது" என்ற மணிமேகலை கூறுகிறது. சைவசித்துவித சித்தாந்த நூல்கள் அறிவை வளர்த்து இன்பமடைய வழிகாட்டுகின்றன. வாய்ச்சாலம் பயன்படாது அன்பு அடக்கம் பிறருக்குக் கேடு செய்யாமை முதலியவை அவசியம் கைக்கொள்ளற்பாலனவே! பரமகாருண்ய வாழ்வு தருமாறு வழிபடல் வேண்டும.

கன்மத்திற்கு மருந்து பரமசிவஉபாசனை என்பது சைவசித்தாந்தப் பெருநூலின் கருத்தன்றே.

கன்ம வகைகள்:

1 ஆதிதைவிகம்
2 அத்தியான்மிகம்
3 ஆதி பௌதிக்கம்

வருவன வரட்டும் சிவ என்று கூறமாட்டேன் என்பாரும் விட்ணுபேர் சொல்லமறுப்பாரும் உளர். திருமாலுக்கு அடிமை செய்ய பிழையான போதனையா? ஏன் காத்தற் கடவுளை நிந்திக்கவேண்டுமா! பழிபாவங்களை செய்து கைகண்ட நல் வாழ்வை இகழ்வது நன்று! பன்னிருபுயமுடைய ஒருபரம் பொருளை நினைந்து வந்தவர் இன்பமடைவர். ஆகவே, கன்மம் ஒழிந்து மலவாசனைகழன்று துன்பமடைவது நலமே. குமரநாயன் செவ்வேல் ஒன்று துயரகற்றும். செய்நன்றி கொன்று வாழாமல் பரம கருணாநிதி சிவகுகபரம தேவாதிதேவர் நமக்கு நல் உபதேசம் செய்ததை முன்னி தேவாதி தேவர்களை வழிபட்டு அகங்காரப் பேயைவெருட்டி அரியதியான வழி நின்று பிறர் குடியைக் கெடுக்காது வாழச் சைவசமயச் அபிமானிகள் முன்னிற்பார்களாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

# முன்மாதிரியான குரு

[ திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை, தெல்லிப்பழை ]

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலய பிரதம குருக்களும், பேராசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறியவரும், ''தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின்'' ஸ்தாபகரும், தலைவருமான பிரம்மஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் சிவகடாக்ஷக் குருக்கள் சென்ற 15-12-70 அன்று அரனடி சேர்ந்தனர்.

குருக்கள் ஐயாவின் மறைவினால் சைவமக்கள்-பிரதானமாகத் தெல்லிப்பழையில் உள்ள அத்தனை குடும்பங்களும் துயரக் கடலுள் அழுந்தியுள்ளார்கள். சென்ற இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக, குருக்கள் அவர்கள் தன்னந் தனிமையாக ஒரு சில சைவசமயத் தொண்டர்களுடைய அயரா ஒத்துழைப்புடன் அளப்பரிய சிவ தொண்டுகளைச் செய்து வந்துள்ளார்கள்.

பாலர் ஞானோதய சபை ஒன்றினை ஸ்தாபித்துச் சின்னஞ்சிறு குழந்தைகளைக் கூட்டுவித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அருளிய சைவவினாவிடைகள், சைவபோதம் முதலாம் நூல்களை ஐயந்திரிபறக் கற்பித்தும், தேவாரத்தைப் பண்ணுடன் ஓதுவித்தும், குரு பூசைகளைக் கொண்டாடியும், வருடாவருடம் சமயபாடங்களில் சோதனை வைப்பித்தும், சித்தியடைந்த பிள்ளைகளுக்குத் தகுந்த பரிசில்கள் வழங்கியு, வருடாவருடம் விழாக்கள் எடுப்பித்தும், சைவப் பெருமக்களை, பாலர் ஞானோதய சபைக்கு வருவித்துச் சைவப் பிரசங்கங்கள் செய்வித்தும் இன்னோரன்ன நற்பணிகளில் தன்னை அர்ப்பணித்து வருவாராயினர்.

குருக்கள் ஐயாவின் கடவுள் பக்தி எல்லைகடந்தது. விபூதியின் சிறப்பைப் பற்றியும், விநாயகப் பெருமானின் கருணையைப் பற்றியும் ஐயா அவர்கள் தமது 'கணீர்' என்ற பக்திக் குரலில் தேவாரங்கள் மூலம் எடுத்து விளக்கும் போது கேட்பவர்கள் மெய்மறந்து விடுவார்கள் பிள்ளைகளுக்குத் தேவாரம் சொல்லித் தரும் நேரங்களில் பெற்றோர்களாகிய நாங்கள் சில சமயம் கேட்டுக் கொண்டிருப்போம்! என்ன அற்புதம்! பதம் பதமாகப் பிரித்து எல்லாம் விளங்கப் பாடும் போது பிள்ளைகளைப் பெற்றவர்கள் உள்ளம் எல்லாம் பூரிக்கும்!

பல வருடங்களாகப் பழுதடைந்து கிடந்த காசி விநாயகர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டும்! கொடியேற்றுவிழாக் காண வேண்டும்! என்ற கொடியதவம் சாற்றிய வண்ணம் இருந்தார்.

விநாயகப் பெருமானின் திருவருளால் தெல்லிப்பழையில் வாழும் செல்வம் படைத்த சைவச் சீமான்கள் பலர் ஐயா அவர்களின் அன்புக் கட்டளைக்கிணங்கி, ஷ்ரீ விநாயகர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய முன்வந்து காசி விநாயகர் ஆலயம் காசினியில் காட்சி கொடுக்கப் போகின்ற வேளை காலன், யாவரும் கண் கலங்கிக் கதறி அலற பெரிய ஐயா அவர்களை எம்மிடம் இருந்து பிரித்து விட்டான்!

ஐயா அவர்களுடைய வாரிசாக வந்த அவர்தம் அருமை மகன் பிரம்மஸ்ரீ சி. கணேசலிங்க ஐயர் தந்தை வழி நின்று, தந்தை விட்டுச் சென்ற மலை போன்ற கடமைகளைச் செய்ய எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோமாக!

சாந்தி! சாந்தி! சாந்தி!

# இளைப்பாறுகின்ற வாசிரியர்

சித்தன் கேணியைச் சேர்ந்த பண்டிதர் த. சுப்பிரமணியம் அவர்கள் தமது 37 வருட ஆசிரிய சேவையின் பின்னர் இம்மாத இறுதியில் ஆசிரிய சேவையினின்றும் இளைப்பாறுகின்றர்.

இவர் தமது இளமைக் காலத்தில் நிகண்டு, இலக்கணம், புராணங்களை நன்கு பயின்று ஓர் சிறந்த ஆசிரியராக அமைந்துள்ளார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை உசன் சுமி பாடசாலையிலும், உயர்தரக் கல்வியைத் தற்போதைய தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் கற்றர்.

1933 ல் வரணி அ.மி பாடசாலையில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலை, கந்தர்மடம், சண்டிலிப்பாய் அருணாசலம், கொடிகாமம் லஸ்றூக் கலலூரி, கும்பாய் சைவத் தமிழ், யாழ் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை, பன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாசாலை முதலான பல இடங்களில் சேவை புரிந்து 1963 ல் தம்முரை சேர்ந்த வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராக கடமையாற்றி ஓய்வு பெறுகின்றர்.

இந்துக் கல்லூரி இந்துவாலிபர் சங்கம், ஆசிரியர் கழகம், பெற்றோர் ஆசிரிய சங்கம் முதலானவற்றின் போஷகராகவும், தலைவராகவும், காரியதரிசியாகவும் முறையே கடமையாற்றிக் கல்லூரியினதும், மாணவர்களினதும் கல்வி வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் பாடுபட்டவர். திருக்கேதீசுவர உற்சவ காலங்களில் மாணவர்களை அழைத்துச் சென்றும், விரிவுரைகள் நிகழ்த்தியும் சமயத்துறையில் மாணவர்களை ஊக்குவித்தவர்.

சுளுந்துறை கதிர்காமத் தொண்டர் சபை, யாழ் - சைவபரிபாலனசபை என்பவற்றில் அங்கம் வகித்துச் சமய சமூக சேவைகளிலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர். சைவசமய புண்ணிய காலம், சுப்பிரமணியம், திருக்கேதீசுவரத் தலமகிமை, பாணந்துறைக் கந்தராந்தாதி, கதுறுதுறைக்கதிர் வேலாயுத சுவாமி ஊஞ்சல் வார பாராயண மாலை முதலான பல சமய சம்பந்தமான நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

மாணவருக்கான இந்துசமய வினாவிடைகள், இலக்கியக் குறிப்புகள் முதலான வற்றையும் வெளியிட்டுள்ளார்.

சமயத் தொண்டிற் சிறப்பாக ஈடுபட்டுள்ள இவர் சந்நிதி கந்தன் கேணித் திருமுறைக் கழகத்தின் வெளியீடுகளான ஆண்டுமலர், பன்னிரு திருமுறை மலர் என்பன வற்றை வெளியிட்டுள்ளார்.

## மக்கட் பிறவியின்......

(1- ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

பாலும் மனித உருவிலேயே கண்டு களிக்கிறான். இறைவனும் தன்னை வணங்கும் மக்களைக் கை விட மாட்டான் அல்லவா?

'வானுலகிலுள்ளவன் உன் மீது கருணைகாட்ட வேண்டுமெனில் நீ பூவுலகிலுள்ளவர் மீது அன்பு கொண்டு பரிவு கொண்டு வாழ்தல் வேண்டும்' என்ற நபிகள் நாயகத்தின் அருள் வாக்கையும் நினைவு கூர்தல் நல்லது. அத்தகைய இன்ப அநுபவத்தால் மக்களாகப் பிறந்ததன் நோக்கமே ஈடேறும். ''உனக்குள்ளேயே இறைவனரசு உள்ளது'' (The kingdom of God is within you) என்ற கிறித்துவப் புனித வாக்கும் பொருள் பொதிந்ததாகிறது. அது பேரானந்தம். அஃதாவது, அண்டத்திலுள்ளதைப் பிண்டத்தில் கண்டு அநுபவித்தலால் வரும் இன்பத்தைச் சொல்லால் உணர்த்த முடியுமா?

''முகத்தில் கண் கொண்டு
காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண் கொண்டு
காண்பதே ஆனந்தம்''

என்பது திரு மந்திரம். இதுவே மக்கட் பிறவியின் மாண்பு.

(தர்ம சக்கரம்)

## நூல் வெளியீடு

''விநாயகர்வரலாறு'' என்னும் நூலை தமது தாபனத்தின் 11-ஆவது வெளியீடாக மில்க் வைற்சோப் தாபனத்தினர் வெளியிட்டுள்ளார்கள். இந் நூலில் விநாயகர் வரலாறும், விநாயகர் அகவலும் விநாயகர் கவசமும் சேர்க்கப்பெற்றுள்ளன. விநாயகர் விரத காலத்திலும் ஏனைய வேளைகளிலும் பாராயணத்துக்குரிய இந்நூல் ஒவ்வொரு சைவ மக்களது இல்லத்திலும் இருக்கவேண்டியதொன்றாகும். இத்தகைய அரிய நூல்கள் பலவற்றை இந்த தாபனத்தினத்தினர் வெளியிட்டு அருந்தொண்டு புரிந்து வருகின்றனர் (ந. நி.)

## ''சிவன் தந்தது'' என்ற சிந்தை வேணும்



பக்தர் ''......செல்வம் சிவன் தந்தது'' என்பதை நம்முள் எத்தனை சைவ பெரியவாள் யோசிக்கிறாங்கண்ணே...?
ஒரு செல்வன், உள நிறைவோடுகொடுக்கவும் (தருமஞ் செய்யவும்) தெரிந்திருப்பானானால், அவனைச் சமூகம் வாழ்த்துப்; அதிலை என்னுங்க தவறிருக்கு? சொல்லுங்க; அப்பிடியானவங்க, நம் மத்தியிலை இக்காலம் இருக்கிறாங்களா? இல்லையா...?

சித்தர்: ''இதுக்கு நானெதைக் கூறட்டும்; அத்தகையவங்க இருக்கிறாங்க; ஆனால் நிறைப இல்லீங்க; அதுக்கும் ஒரு இனம் தவஞ்செய்தல்லவோ இருக்கவேணும்? யாழ்ப்பாணத்தில் இருக்கிற ஒரு பிரபலமான 'சோப்தொழிற்சாலையினர்' செய்து வருகிற சிவதருமங்களைப்பற்றி நினைக்காதவரில்லையெனக் கூறுகிறார்கள்; அவர்பெயர் நீங்கள் அறியாததா? நிற்க, 'நன்றி மறந்தாற்குய்வில்லை'யென்றனர் பெரியோர்; ''பிறக்கும் பொழுதுகொடுவராத, இறக்கும் போது கொடுபோகாத, இடை நடுவிற் குறிக்குமிச் செல்வம்'' 'சிவன் தந்தது'என்று கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

''நாயன்மார் - நாதன்''

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இளையவிகத்தையா மணிக்கூடு கோபுர வீதி யாழ்ப்பாணம்.
—வழககாளி

வழ: இல. M B 7351 எதிராக

பொன்னர் சின்னத்தம்பி கைம்பெண் சரசு காலஞ்சென்ற பொன்னர் சின்னத்தம்பி இறவுக்கை சந்தி ஒழுங்கை மானிப்பாய் என்பவரின் சட்டப்பிரதிநிதி
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7351ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு தை மீ 12-ம் திகதி(12-1-71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 9360/-ம் 7-4-1965 தொடக்கம் 11-6-69 வரைக்கும் ரூபாய் 6000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 556/30 ரூபாய் 125 ஐக் கழிக்கவும்.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலி மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலையில் இருக்கும் காணி ''குஞ்சிகொத்துளவின்'' (Kunchikotbuthalvin) வி. பரப்பு நாலரை ($4\frac{1}{2}$) யும் கல்வீடும் செய்பயிர் வான்பயிர்களும் கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிலும் தூர்வையிலும் அரைவாசிப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் எல்லைகிழக்கு-தம்பு மாரிமுத்துவும் பெண் சரஸ்வதியின் ஆதனமும். வடக்கு-ஒழுங்கை மேற்கு-இரத்தினம் கைம்பெண் முத்துவின் ஆதனம் தெற்கு-நாகலிங்கம் பெண் பசுபதிப்பிள்ளையினது உரிமைக்காரரின் ஆதனம். இதடங்கலும் அதன் சொத்துரிமைகளும். பதிவு இல: E. 304/285.

'வேல்பதி' S. சங்கரப்பிள்ளை J. P.
புத்தூர். 4-12-70 கொமிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 433 25-12-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுளிபுரம்: சின்னத்துரை பழனிசாமி —வழக்காளி.
இல: M B 10847 எதிராக
தொல்புரம், கேணிக்கடவை: 1. மாரிமுத்து கந்தன்
2. பெண் வியாளி —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10847ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 18-ம் திகதி [18-1-71] திங்கட்கிழமை பிற்பகல் 4-00மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 1400/-ம் இதில் ரூபா 1000/- க்கு 30-5-69 திகதி தொடக்கம் 24-1-70 திகதி வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 334-15 சதம்,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை ''வளுககற்புலம்'' விலப்பரப்பு நாலு(4)ம் குனி 10,9/14ம் எல்லை கிழக்கு-நாராணபிள்ளை நாகலிங்கத்தின் ஆதனம். வடக்கு-நாகமுத்து இராசையாவுக்கும் கதிரவேலு தம்பிமுத்துவுக்குமுரிய ஆதனம். மேற்கு-வேலுப்பிள்ளை வல்லிபுரத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு-வெற்றிவேலு ஐயாத்துரையின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். இதடங்கலும இன்னும் தெற்கெல்லைக் காணிகருள் இருககும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
தெல்லிப்பழை, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
18-12-70. M 432-25. 12

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கீரிமலை தற்போது மலாயா: 1. சுப்பிரமணியம் குமாரபதி.
2. பெண் அம்பிகாதேவி (இவர்களின் அற்றோனி தத்துவகாரி) கீரிமலை செல்லையா கைம்பெண் இராசேஸ்வரி அம்மாள். —வழக்காளிகள்.
இல: M B 7916 எதிராக
யாழ்ப்பாணம், செழும்புத்துறை சென். மேரி தேவாலய ஒழுங்கை
1. நாகலிங்கம் சோமசுந்தரம 2 பெண் புஸ்பராசமணி
3. செல்லப்பா கைம்பெண் அன்னபூரணம் (மரணம்) —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்தறிக் கோட்டின் M B 7916-ம் இலக்கவழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணி 1971-ஆம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மீ 16-ம் திகதி (16-2-71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக காணிக்குள் கின்று பிரசிதத ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 20240/-ம் இதில் ரூபா 12 00/-க்கு 2-1-64 திகதி தொடக்கம் 6-12-66 திகதி வரைக்கும் 100க்கு 11 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 475-84 சதம் இதில் கோட்டுச் செலவு இறுபட்டது மேலும் ரூபா 42/-ம முத்திரைச் செலவும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெருவிறை ''கறுவினியடி வளவும்; கறுவிலியடியும்'' விலப்பரப்பு பத்தும் (10-ம்) வீடும் போட்டிட்கோவும், குசினியும், கிணறும். எல்லை கிழக்கு-சிற்றம்பலம் இராசரத்தினத்தின் ஆதனம் வடக்கு-தெண்டாயுதபாணி கோவில் ஆதனமும் றோட்டும் மேற்கு-செல்லப்பா அருளம்பலத்தின் ஆதனம். தெற்கு-செல்லப்பா கனகரத்தினத்தின் ஆதனம். இதடங்கலும், முற்பதிவு D. 257/268

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 18-12-70 Commissioner & Valuer
எம் 431 25-12-70.

# மூலிகையைக்கொடுத்து நோய்களை அகற்றும் முருக பக்தர்

## காணிக்கை கொண்டு சிவப் பணிகள்

### எமது நிருபர் நேரிற் பார்வையிட்டுள்ளார்

தமிழகத்தில் தென்னாற்காடு ஜில்லாவில் செஞ்சிகோட்டைக்கு சமீபமுள்ள 'முருகன் தங்கல்" என்ற சிற்றூரிலுள்ள திரு வே. கண்ணன்அடிகள் என்பவர், முருகப் பெருமானின் திருவருளால் சர்வநோய்களையும் தீர்க்கக்கூடிய மூலிகை (பச்சிலை) கிடைக்கப் பெற்று கடந்த 4 ஆண்டுகளாக இதுவரையிலும் சுமார் பலஇலட்சம் மக்களுக்கு இலவசமாக மூலிகையை கொடுத்துள்ளார். நோயாளிகள் இஷ்டப்பட்டுவழங்கிவரும் காணிக்கையால் சமய நற் பணி (ஆலய ஜீர்ணோத்தாரணங்கள்) புதிய ஆலயங்கள் அமைத்துக் கொண்டும் வருகின்றார்.

சிற்றூர் களிலுள்ள மக்களின் அழைப்பின்பேரில் அந்தந்த சிற்றூர்களுக்கும் வாரத்துக்கு ஓர் நாள் நற்பணிகள் முடிவுபெறும் வரை சென்று நோயாளிகளுக்கு மூலிகையைக் கொடுத்துக் கொண்டும் வருகின்றார்.

மூலிகை கொடுத்து வரும் 4, 5 சிற்றூர்களுக்கு எமது நிருபர் நேரிற் சென்று பெரும் மக்கட் கூட்டம் மூலிகை பெறுவதற்காகக் கூடிக் காத்திருப்பதைக் கண்ணுற்றதாகத் தெரிவிக்கின்றார்.

திரு. கண்ணன் அடிகளின் சொந்த ஊரான முருகன்தங்கலிலுள்ள குன்றின்மீதும் நோயாளிகளின் காணிக்கையால் நூதனமாக ஸ்ரீ பால முருகன் ஆலயம் அமைப்பித்துக் கொண்டும் வருகின்றார். இந்த ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் எதிர் வரும் தை மாதத்தில் நிகழவிருக்கிறது. சிறந்த முருக பக்தரான ஸ்ரீ கண்ணன் அடிகளாரை ஈழத்துக்கு அழைக்க, யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினர் ஆலோசித்து வருகின்றனர்.

இந்துசாதனம்' சிதம்பர நிருபர் ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நாகலிங்கம் கல்லசேகரம் பண்டைத்தரிப்பு —வழக்காளி

இல: M B 10560 எதிராக

1 அம்பலவாணர் ஏபிரகாம் பொன்னுத்துரை மகள் கருணாநந்தினி — சங்கானை மேற்கு, தற்சமயம் இராசையா ஸ்பென்சர் பஞ்சாட்சரத்தின் மனைவி

2 இராசையா ஸ்பென்சர் பஞ்சாட்சரம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10560 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1971ம் ஞூ தை மீ 20-ம் திகதி (20-1-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 19,670 44ம் 23-1-69 தொடக்கம் 8-10-69 வரைக்கும் ரூபா 13,000 க்கும் 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 623-49

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு இறை சங்கானை கோவிற்பற்று சங்கானை மேற்கு இறை "சரிப்பனை" களியம் புளியனையும் பள்ளங்காடும் நிலப்பரப்பு 29 குளி 3½ அளவின்படி நிலப்பரப்பு 30 குளி 17½ இதில் விற்ற நிலப்பரப்பு 14 பிற நீங்கலாகவும் மிகுதியாய் உள்ள நிலப்பரப்பு 16 குளி 17½ கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு 8 குளி 17, 1/2 இதற்கு எல்லை கிழக்கு பொன்னுத்துரை பெண் கண்ணம்மாவின் ஆதனம் வடக்கு இராமசாமி செல்வரத்தினத்தின் ஆதனம், மேற்கு இதன் மிகுதி ஆதனம், தெற்கு ஒழுங்கை, மேற்கு எல்லைக் காணியிலும், கிழக்கு எல்லைக் காணியிலும் இருக்கும் கிணறுகளில் பங்கும் தூர்வை வழிவாய்க்கால் பங்கும் இதைச் சேர்ந்தவைகளில் பங்கும் இதடங்கலும். பதிவு இல: E 363/147

2 ஷை இறை "பள்ளங்காடு" நிலப்பரப்பு 2, இதில் உள்ள வீட்டில் ½ பங்கும் கிழக்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் தூர்வைப் பங்கும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு பொன்னுத்துரை பெண் அன்னம்மாவின் ஆதனம், வடக்கும் மேற்கும் அம்பலவாணர் ஏபிரகாம் பொன்னுத்துரையின் ஆதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலும் பதிவு E 341/6

கா. தர்மலிங்கம்
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

உரும்பிராய்
23-12-70 எம். 435 25-12-70

---

## தமிழ்நாடு இசை விழாவில் ஈழத்துச் செல்வியின் பரதநாட்டியம்

தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இசை விழாவில் (24-12-70) நேற்று ஈழத்தைச் சேர்ந்த குமாரி கீதாஞ்சலியின் பரத நாட்டியம் வாணி மகாலில் நிகழ்ந்தது. இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கம் இந்த செய்தி தந்தது.

## பாராட்டப் பெற்றார்

புதுடில்லியில் அணிமையில் நிகழ்ந்த யுனெஸ்கோ மகாநாட்டில் ஈழத்துப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட திரு. எம். அற்புதநாதனின் ஆராய்ச்சிக் கட்டுரை மிகச் சிறந்தது என்ற பாராட்டைப் பெற்றுள்ளது.

பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளும் இந்த ஆராய்ச்சிக் கட்டுரையைப் புகழ்ந்தனர். திரு. அற்புதநாதன் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் விஞ்ஞானக் கல்வி அதிகாரியுமாவர். —

## நெற்பயிர்களுக்கு நோய்

பரந்தன் பகுதியில் இவ்வாண்டு நெற் பயிர்களுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளது "காவோலை நோய்" என்னும் இதற்கு மருந்து வகைகளைத் தெளித்தும் பலன் காணமையினால் விவசாயிகள் ஏக்கத்துடன் இருக்கிறார்கள். இனி, எம் செயலில்லை. தெய்வமே வழிகாட்ட வேண்டுமென்று பிரார்த்தனையுடன் வரம்புகளில் நேர்த்திக் கடனுக்காக முளைக்கட்டைகளை நாட்டியுள்ளனர்.

---

நேயர்கள் நெஞ்சம்

## திருமுறை வளர்க

ஆலயங்களில் சின்னமேளத்திற்கும், திரைப் படப்பாடலுக்கும் (சினிமா) மதிப்புக் கொடுத்து மக்கள் கூடும் இவ்வேளையில் தேவார திருவாசகங்கள் பாடும்பொழுது ஆயிரக்கணக்கான மக்கள் கூடி அமைதியாகவும் பக்தியுடனும் பலமணி நேரம் கேட்டு இன்புற்றேகுகின்றனர். காரணம் பண்முறைவழுவாது பக்தியுடன்பாடிக் காட்டுவோரின் திறமைதான்.

அதுமட்டுமல்ல சென்ற பல வருடங்களாக அநேக ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் திருமுறைக் கச்சேரியே முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெற்று மக்கள் மத்தியில் பக்தி உணர்வை ஏற்படுத்தி வருகின்றது இங்ஙனம் ஏற்படக் காரணமாயிருப்பது இந்து ஆலோசனைச் சபை சைவ மக்களாகிய எங்களுக்குத் திருமுறையைப் பண்முறையாகப் பாடுவதற்கு பயிற்றுவிக்க தமிழ் நாட்டில் இருந்து அழைப்பித்த பண்ணிசைச் செல்வர் திரு பி. ஏ எஸ். இராஜசேகரன் அவர்களின் சேவையாகும். இப்படியான ஒருவரை இன்னும் பல காலம் இங்கு தங்கி எங்களுக்கு திருமுறைகளைப் பண்முறையாக கற்பிப்பதற்கு இருக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்பதற்குப் பதிலாக போட்டியையும்பூசலையும் உண்டுபண்ணி கிடைத்த அரும்பெரும் பொக்கிஷமாகிய ஒன்றை கைநழுவவிட முயற்சிப்பது சைவசமயத்திற்கே பெரும் தீங்கிழைத்தலாகும். ஆகவே, தனிப்பட்ட மனக் குரோதங்களை விடுத்து இறைவனாற் கிடைக்கப்பெற்ற இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த ஒவ்வொருவரும் முன்னேற்றமடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போமாக.

—ம தங்கராசா

உரும்பிராய் 19-12-70

---

## புலியூரந்தாதி

மாதகல் மயில்வாகனப் புலவர் இயற்றியது. உரையாசிரியர் மட்டுவில் ம. க. வேற்பிள்ளையவர்கள் எழுதிய உரையுடன் எங்கள் தாபனத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதி ஒன்றின் விலை
ரூபா 2-00

அதிபர்:
சைவப்பிரகாசஅச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்.

---

## காந்தி சேவா சங்கம் சர்வோதய நிதி திரட்டல்

சர்வோதய பாத்திரங்கள் மூலம் ஒக்ரோபர் மாதம் 106 வீடுகளிலிருந்து 18கொத்து அரியும் 6 ரூபா 21 சதமும் காந்திய சேவா சங்கத்தாரால் பெறப்பட்டது.

பம்பலப்பிட்டி - கனிஷ்ட இந்துக்கல்லூரி சர்வோதய பாத்திர இயக்கம் மூலம் 108 கொத்து அரிசியும் 21 ரூபா 40 சதமும் கிடைத்துள்ளது.

(காந்தீயம் 1970)

---

## திருவெம்பாவை வழிபாடு

இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில், வண்-மேற்கு, அரசடி விநாயகர் ஆலயத்தில், திருவெம்பாவைக் காலங்களில் அதிகாலை 4 மணியளவில் நடைபெறும் திருவெம்பாவை வழிபாட்டைத் தொடர்ந்து, ஷை ஆலயச் சுற்றடல்களில் பஜனை நடாத்தவுள்ளனர்.

---

திருக்கேதீச்சரத்தில்

# திருவாசகவிழா

### திருப்பனந்தாள் ஆதீன ஓதுவார் வருகிறார்

திருவெம்பாவைத் திருநாட்களில் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் (1-1-71 — 10-1-71) ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தின் ஆதரவில் சாதனையும், திருவாசக விழாவும் வழமைபோல மிகச் சிறப்பாக நிகழவிருக்கிறது.

சாதனைநாள் சொற்பொழிவு, புராண படனம், திருவாசக விழா என்பனவற்றில் ஈழத்திலுள்ள பல பேரறிஞர்கள் கலந்து கொள்ளுகின்றார்கள். சிவபூசை மகாநாட்டுக்கு சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்கள் பிரதம குருபீடம் வகிப்பார்கள். பட்டமளிப்பு விரிவுரைகள் என்பன நிகழும்.

இவ் விழாவில் தமிழகத்தைச் சார்ந்த திரு. முத்து. கந்தசாமி தேசிகர் (திருப்பனந்தாள் ஆதீன ஓதுவார் மூர்த்திகள்) அவர்களும் திருமயிலை கா. சோ. காஞ்சன மாலை அம்மையார் அவர்களும் கலந்துகொள்ள இருக்குகிறார்கள்.

(ந. வி)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 3355

1) கதிரவேலு தியாகராசாவும் மனைவி.
(2) சரஸ்வதியும் இருவரும் சுளிபுரம். —வழக்காளி

எதிராக

கணபதிப்பிள்ளை வேலாயுதர் கைம்பெண் நாகமுத்து
சுளிபுரம் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B- 3355ஆம் இலக்க வழக்கின்படி எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971ம் ஞூ மாசி மாதம் 14-ம் திகதி (14-2-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை - முதல் வட்டி ரூபா 1122-00ம் 9-5-60 தொடக்கம் 17-5-68 வரைக்கும் ரூபா 700/- க்கும் 9 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 503-39 இதில் கோட்டு செலவிற்குக் கொடுக்கப்பட்ட ரூபா 400-00 கழித்து அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்கு, சங்கானைகோவிற்பற்று, சுளிபுரம் இறை "எருமைப்புள்ளன்வயல்" தெறபரப்பு 11 குழி 4 இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் ஆறுமுகம் கதிரவேலுவின் ஆதனம் மேற்கு சின்னட்டி அப்பாப்பிள்ளையின் ஆதனம், தெற்கு குளம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

கா. தர்மலிங்கம்,
கொமிசனரும்விலைமதிப்பாளரும்.
உரும்பிராய் மேற்கு, 23-12 70,
எம். 436 25-12-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 9959

யாழ்ப்பாணம் அத்தியடி
1. சோமசுந்தரம் கணபதிப்பிள்ளை
2. பெண் நாகரத்தினம்

—வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் திருநெல்வேலி
1. கந்தையா குமாரசிங்கம்
2. பெண் கனகம்மா

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 9959-ஆம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1971-ஆம் ஞூ பெப்ரவரி (மாசி) மாதம் 15-ஆந் திகதி (15-2-71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 6860-ம் இதில் ரூபா 4000-க்கு 8-3-68 திகதி தொடக்கம் 1-10-68 திகதி வரைக்கும் 00 க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 313-40 சதமும். இதில் ரூபா 1600/- இறுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று திருநெல்வேலியிறை வென்தக சோனுர் ளவு" நிலப்பரப்பு இரண்டரை (2½) செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு முருகர் இராமுப்பிள்ளையின் உருமைக்காரருக்குரிய ஆதனம், மேற்கு ஆறுமுகம் கைம்பெண் செல்லத்தின் ஆதனம். தெற்கு கந்தர் சின்னத்துரைக்கும் சின்னத்துரை நாகமணிக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

முற் பதிவு D. 130/133.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 7-12-1970
எம். 430 25-12 70

---

## ஆனைக்கோட்டை முத்து விநாயகர் ஆலயம்

ஷை கோவிலில் திருவெம்பாவை காலங்களில் அதிகாலை 3-30 மணி தொடக்கம் திருவெம்பாவை ஓதலும், திருவாதவூரடிகள் புராண படனமும், உற்சவமும், 9-1-70ல் ரத உற்சவமும் 10-1-70ல் தீர்த்த உற்சவமும், நடைபெறும

## யாழ்ப்பாணப் பொருட்கள்

யாவத்தை என்னும் இடத்தில் போயா தினங்களில் நடைபெறும் தேசிய சந்தையில் யாழ்ப்பண மரக்கறி வகைகளுக்கும், பழ வகைகளுக்கும் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. இப்பொருட்களை மிக விருப்புடன் வாங்கிச் செல்வதால் சில வேளை தட்டுப்பாடு நிலவுகிறது.

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 25—12—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்